கூடலூர் வட்டம், பொன்னூரிலுள்ள அகதிகள் காலனி

*வினா எண். 19— திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், பொன்னூர் என்ற இடத்தில் உள்ள தாயகம் திரும்பிய அகதிகள் காலனிக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதுவரை எத்தனை பேர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது?

(இ) அவர்களுக்கு வேலை உத்தரவாதம் உண்டா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம். தற்காலிக வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) 279 நபர்களுக்கு தற்காலிகப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களில் 136 நபர்கள் மட்டும் நிலத்தைப் பெற்றுக்கொண்டு வீடுகள் கட்டியுள்ளார்கள்.

(இ) இல்லை.

திரு. ஏ. டி. கருப்பையா : நீலகிரி மாவட்டம் குன்னூரில் இலங்கையில் இருந்து வந்த அகதிகள் சாதாரணமாக ஓலைக் குடிசைகள் அமைத்துக்கொண்டு குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் அங்கே பல ஆண்டுகளாக இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், சிலருக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்று. அதற்காக நான் என்து மனமார்ந்த நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் பட்டா கொடுத்துவிட்டால் மட்டும் போதாது. அவர்கள் வீடு கட்டிக் கொள்ள கடன் உதவி செய்யப்படுமா? அங்கே குடியிருக்கிற சாதாரண நூற்றுக்கணக்கான இலங்கை அகதிகளுக்கு வேலைக்கு உத்தரவாதமுண்டா? அவர்களுக்கு ஏதாவது வாய்ப்பு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இவர்களில் 136 நபர்கள் சொந்தப் பணத்தைக் கொண்டு வீடுகள் கட்டியுள்ளார்கள். 136 குடும்பத்தினர் சொந்தத்தில் வீடுகள் கட்டியுள்ள போதிலும் தற்போது 117 குடும்பங்களே காலனியில் வசித்து வருகின்றனர். அவர்கள் இலங்கையில் இருந்து வரும்போது வியாபாரக் கடனை எதிர் நோக்கி வந்தவர்கள். அந்த நோக்கத்தோடு இந்த அகதிகள் அனைவரும் முதல் தவணையாக ரூ. 3,000 பெற்றுவிட்டனர். ஆனால் அவர்கள் தொழிலை சரிவர நடத்தாமல் இரண்டாவது தவணையாக

ரூ. 2,000 பெறவில்லை. இரண்டு குடும்பங்கள் மட்டும் இரண்டாவது தவணையாக ரூ. 2,000 பெற்று தொழில் நடத்தி வருகின்றனர்.

பெரியார் மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை பெறுபவர் எண்ணிக்கை

*வினா எண். 20—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டத்தில் முதியோர் உதவித்தொகை பெறும் நபர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) உதவித்தொகை கோரி 1980–81 ஆம் ஆண்டு வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) பெரியார் மாவட்டத்தில் முதியோர் 3,685 பேரும், விதவைகள் 1,180 பேரும் உடல் ஊனமுற்றவர்கள் 575 நபரும் ஆக மொத்தம் 5,440 நபர்கள் உதவித்தொகை பெற்று வருகின்றனர்.

(ஆ) 1980–81 ஆம் ஆண்டில் முதியோர் ஓய்வூதியம் கேட்டு 7,021 பேரும், விதவைகள் ஓய்வூதியம் கேட்டு 3,074 பேரும், உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை கேட்டு 1,066 பேரும், ஆக 11,161 நபர்கள் விண்ணப்பம் செய்துள்ளனர்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : இந்த முதியோர் உதவித் தொகை பெறுகிறவர்களை எந்த அடிப்படையில் அரசு தேர்ந்தெடுக்கிறது? அவர்களுக்கு வயது வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : முதியோர் உதவித் தொகை வயது அடிப்படையில் உள்ளது. 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. விதவைகளாக இருந்தால் 40 வயது என்றும் ஊனமுற்றோராக இருந்தால் 45 வயது என்றும் இப்படி வயது வரம்பு அடிப்படையில் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. மாதத்திற்கு ரூ. 25 வாரம் ஒன்றுக்கு ஒரு நபர் ஒன்றுக்கு ஒரு கிலோ அரிசி, வருடம் இரண்டு முறை சேலை வேட்டி இலவசமாக வழங்கப்பட்டுவருகிறது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : முதியோர் உதவித் தொகை கொடுக்கப்படுகிற அளவிற்கு இப்போது ஏராளமான பேர்கள் மனு செய்து இருக்கிறார்கள். அவைகளை அரசு பரிசீலனை செய்து உடனடியாகத் தருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா?